IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.155/2025

Deposition of Witness for P.W.3

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.ரமேஷ் |
| FATHER NAME | - | வரதராஜ் |
| VILLAGE | - | வஞ்சூர் |
| TALUK | - | காட்பாடி |
| OCCUPATION | - | பாரில் வேலை செய்கிறேன் |
| AGE | - | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.02.2026.

2ம் எதிரி ஆஜர் இல்லை மனு ஏற்பு. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் வஞசூரில் குடியிருக்கிறேன். நான் சம்பவம் நடந்த பெருமுகை பாரில் சப்ளையர் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது. இரண்டாவது கையெழுத்து ராமகிருஷ்ணன் என்பவருடையது. 29.04.2024 அன்று பெருமுகை பார் அருகிலுள்ள ஆத்தோரம் நான் சென்றபோது காலை 06.45 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் ஆனந்தனை போலீசார் விசாரித்தபோது ஆனந்தன் என் முன்னிலையிலும் ராமகிருஷ்ணன் முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். மற்ற எதிரிகளும் அங்கு போலீசாருடன் இருந்தார்கள். போலீசார் டைப் செய்த தாளை கொடுத்தார்கள் அதில் நானும் ராமகிருஷ்ணனும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும்

ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.4. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை-எதிரிகள் தரப்பு ஆஜரான வழக்கறிஞர் மூத்த வழக்கறிஞர் Out of Station என தெரிவித்து குறுக்கு விசாரணை செய்ய இயலாது என கூறிவிட்டதால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என அ.சா.3 சாட்சியம் முடிக்கப்பட்டது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 23.02.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.02.24 15:07:10 +0600

Additional District Judge(FTC),
Vellore